DINAMANI-23-OCT-2010



ஈசா யோகா அறக்கட்டளை சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பசுமை விழிப்புணர்வுப் பேரணி

# பசுமை விழிப்புணர்வுப் பேரணி

தஞ்சாவூர், அக். 22: தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை ஈசா யோகா அறக்கட்டளை சார்பில் பசுமை விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

தஞ்சாவூர் ரயிலடியில் பேரணியை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கே.ஏ. செந்தில்வேலன் தொடக்கி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சுரேஷ்குமார் அனைவருக்கும் மரக் கன்றுகளை வழங்கினார். மேரீஸ்கார்னர் வழியாக ராமநாதன் மருத்துவமனை ரவுண்டான, டெம்பிள்டவர், மேம்பாலம் ரவுண்டானா வழியாகச் சென்ற பேரணி, அன்னை சத்யா விளையாட்டு மைதானம் எதிரில் உள்ள பி.வி. செல்வராஜ் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நிறைவடைந்தது.

பேரணியில் கல்லூரி மாணவ, மாணவிகள், ஈசா யோகா அறக்கட்டளை தன்னார்வத் தொண்டர்கள், சமூக ஆர்வலர்கள் சுமார் 3,000 பேர் பங்கேற்றனர்.